DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : உடையார் | Father/Husband Name : குருசாமி |
| Age : 29 | Village : வெம்பக்கோட்டை |
| Taluk : | Calling : மின்வாரியம் (ஒப்பந்த தொழிலாளர்) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Sep 29, 2025 6:02 PM

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் வெம்பக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். தற்போது வயரிங்வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளராக பணி செய்து வந்தேன்.

2. கடந்த 04.01.2020ம் தேதி நானும் எனது ஊரைச் சேர்ந்த கருப்பசாமி, சுப்பையா, மணிகண்டன், பாலமுருகன், கண்ணபிரான், ஜோதி, இராமசந்திரன் என்ற சந்துரு அகியோர்கள் காலை 09.00 மணியளவில் மின்பாதை ஆய்வாளர் சண்முகவேலுடன் சிமெண்ட் மின்கம்பங்களை நடுவதற்காக தாயில்பட்டியை சேர்ந்த நம்பிராஜ் என்பவரிடம் டிராக்டரை வாடகைக்கு எடுத்து தாயில்பட்டி வேலுச்சாமி என்பவரது உணவகத்திற்கு பின்னால் போட்டு வைத்திருந்த சிமெண்ட் மின்கம்பங்களை இரண்டு இரண்டாக ஏற்றி மடத்துப்பட்டி – தாயில்பட்டி ரோட்டில் மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசைநோக்கி வசந்தம் நகர் சர்ச் அருகே நான்கு மின்கம்பங்களை நட்டுவிட்டு, பின்னர் 03.45 மணியளவில் மேலும் இரண்டு மின்கம்பங்களை டிராக்டரில் ஏற்றி வேலுச்சாமி கடை அருகே ஊன்றும்போது ரோட்டின் இரண்டு பக்கங்களும் ஆட்களை நிறுத்தி சிமெண்ட் மின்கம்பங்களை இறக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தோம்.

3. டிராக்டரின் ஓட்டுனர் முருகன் ஆவார். டிராக்டரை தெற்கு வடக்காக நிறுத்தி, ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் வந்த வாகனங்களை நிறுத்திவிட்டு, 4 நபர்கள் டிராக்டரின் மேல் ஏறி கயிறு போட்டு மின்கம்பங்களை இறக்கிக்கொண்டிருந்தோம். கீழிருந்த 4 நபர்கள் தோளில் சுமந்து இறக்க நின்றுகொண்டிருந்தார்கள். மின்கம்பத்தை கீழிருந்த நபர்கள் வாங்கிக்கொண்டிருந்தபோது, அந்த சமயத்தில் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்த TN 67 5644 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா பிக்கப் வாகனத்தினை ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து அங்கு நின்றுகொண்டிருந்த இராமசந்திரன் என்ற சந்துரு மீது மோதியதில் சந்துருவிற்கு தலையிலும், காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. காதிலும் மூக்கிலும் இரத்தம் வந்தது. ஏற்கனவே அந்த சாலையில் வருகின்ற வாகனத்தை நிறுத்துவதற்காக நிற்கவைக்கப்பட்டிருந்த நபர்கள் மகேந்திரா பிக்கப் வேனை பார்த்ததும் சத்தம்போட்டார்கள். அதனால் இராமசந்திரன் என்ற சந்துரு தனது அருகேயிருந்த நபர்களை காப்பாற்றுவதற்காக தள்ளிவிட்டார். அவர் நடுப்பகுதியில் நின்றதால் அவரால் தப்பிக்க முடியவில்லை.

4. அவருக்கு பின்னால் இருந்து வந்த மேற்படி மகேந்திரா பிக்கப்

வாகனத்தின் முன்பக்கம் இருந்த பம்பர் சந்துருவின் பின்பக்கத்தில் மோதியதில் அவருடைய தலை மின் கம்பத்தின் மீது மோதி விட்டது. அந்த வேன் சாலைக்கு வடக்கு திசையில் கவிழ்ந்து விட்டது.

5. பினனர் காயம்பட்ட சந்துருவை நாங்கள் இருசக்கர வாகனத்தில் தாயில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கு முதலுதவி செய்துவிட்டு மேல்சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சந்துருவை பரிசோதித்த மருத்துவர் சந்துரு இறந்துவிட்டதாக கூறினார். நடந்த சம்பவத்திற்கு அ.சா.1 போலீசாரிடம் புகார் கொடுத்தார். பின்னர் இறந்துபோன இராமசந்திரன் என்ற சந்துருவின் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் தகவல் கூறினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

6. இந்த வழக்கு விபத்தில் டிராக்டர் மற்றும் மின் கம்பங்களுக்கு சேதம் எதுவும் இல்லை என்றால் டிராக்டருக்கு சேதம் கிடையாது, மின் கம்பத்தில் சேதம் இருந்தது. மின் கம்பத்தில் சேதம் இருந்தது என்று போலீசார் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு விபத்தில் வேறு யாருக்கும் காயம் கிடையாது என்றால் சரிதான். சந்துருவின் மீது வாகனம் எந்த இடத்தில் எடுத்தது என்றால் அவருடைய பின்பக்கம் இடுப்பு பகுதியில் இடித்தது. அந்த வாகனம் வேகமாக வந்து இடுப்பில் தள்ளிவிட்டதா என்றால் அதிவேகமாக வந்து தள்ளிவிட்டது. வேன் அதிவேகமாக வந்து சந்துருவின் இடுப்பு பகுதியில் எடுத்து இருந்தால் இடுப்பு பகுதியில் சேதம் இருக்கும் என்றால் சரிதான். அவருக்கு இடுப்பு பகுதியில் காயம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

7. தலையில் எந்த இடத்தில் காயம் இருந்தது என்றால் நெற்றியில் காயம் இருந்தது, அதில் வெட்டு காயம் ஏற்பட்டு, மூக்கு மற்றும் காதிலிருந்து அதிகமான ரத்தம் வந்தது. சந்துரு தள்ளிவிட்டதாக நான் கூறும் நிலையில் அந்த நபர்கள் யாரெல்லாம் என்றால் மணி மற்றும் இரண்டு நபர்கள், அவர்களின் பெயர் எனக்கு தற்போது சரியாக ஞாபகம் இல்லை. இந்த விபரத்தை போலீசார் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் சரிதான். சந்துரு குனியும் போது தான் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சந்துருவுக்கு மின் கம்பம் விழுந்ததில் தான் காலில் காயம் ஏற்பட்டது என்றால் வாகனம் மோதியதில் அவருடைய கால் தரையில் உரசியதால் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. டிராக்டரில் மின்கம்பம் இருந்த பகுதிக்கும் சந்துரு நின்று கொண்டிருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் இரண்டு அடி தூரம் இருக்கும்.

8. பள்ளத்தில் கவிழ்ந்த கார் டிராக்டரில் இருந்து எவ்வளவு தூரத்தில் கிடந்தது என்றால் டிராக்டர் அருகேயே கிடந்தது. மேற்படி வாகனம் விழுந்த இடத்திற்கும், மின் கம்பம் இருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருந்தது என்றால் நாங்கள் மின் கம்பத்தை இறக்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, சாலைக்கு ஓரத்தில் இருந்த பள்ளத்திற்கு மேல் மின் கம்பம் நீண்டு கொண்டிருந்தது, அந்த மின்கம்பத்திற்கு கீழே அந்த வேன் கவிழ்ந்து கிடந்தது. மின்கம்பத்தில் சேதம் இருந்ததாக கூறும் நிலையில் அந்த மின்கம்பத்தில் இருந்த சிமெண்ட் உடைந்து சாலையில் விழுந்ததா என்றால் மின் கம்பத்தில் விரிசல் மட்டும் விழுந்தது.

9. நாங்கள் மின்கம்பத்தை இறக்குவதற்காக வைத்திருந்த டிராக்டர்

சாலையை மறித்து, வடக்கு – தெற்காக நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். டிராக்டருக்கும் இரண்டு பக்கத்திலும் வரும் வாகனங்களை நிறுத்திய நபர்களுக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 அடி தொலைவு இருக்கும். எதிரி ஓட்டி வந்த வாகனம் சாலைக்கு எந்த பக்கம் கிடந்தது என்றால் இடது பக்கம் ( வடக்கு திசையில்) கிடந்தது. எதிரி சாலையின் இடது பக்கமாக தான் வந்தார் என்றால் சரிதான். எங்களுடைய டிராக்டரின் முகப்பு பகுதி சாலையின் எந்த திசையை பார்த்து நின்றது என்றால் தெற்கு பார்த்த நின்றது. சாலையில் வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு பக்கமும் இரண்டு, இரண்டு நபர்கள் இருந்தார்கள். எவ்வளவு நேரமாக அந்த திசையில் வந்த வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தார்கள் என்றால் சுமார் இரண்டு மணி நேரமாக நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆகையால் அந்த பகுதியில் இரண்டு பக்கமும் வந்த வாகனங்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆகையால் எத்தனை வாகனங்கள் அங்கு இருந்திருக்கும் என்றால் நான்கு சக்கர வாகனங்கள் இரண்டு அல்லது மூன்று தான் இருந்திருக்கும், இருசக்கர வாகனங்கள் நிறைய இருந்தது. இது சாலைக்கு மேற்கு பக்கம் இருந்த வாகனங்கள் என்றால் சரிதான்.

10. ஆகையால் அந்தப் பகுதியில் சாலை முழுவதும் வாகனங்கள் இருந்தது என்றால் நாங்கள் சாலைக்கு வடக்கு பக்கம் மின்கம்பத்தை ஊன்ற வேண்டும் என்பதற்காக, மேற்கிலிருந்து வந்த வாகனங்களை சாலைக்கு தெற்கு ஓரமாக நிறுத்தி வைத்திருந்தோம். நாங்கள் மின்கம்பத்தை நிறுவும்போது ஒருவேளை விபத்து எதுவும் ஏற்பட்டால் அந்தப் பகுதியில் வரும் வாகன ஓட்டிகளுக்கு விபத்து எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக பொதுவாகவே நாங்கள் வாகனங்களை ஒரு ஓரமாகத்தான் நிறுத்துவோம். அவ்வாறு நிறுத்தி வைத்திருந்தபோது, சாலையின் வடக்கு பகுதி காலியாக இருந்ததால் மேற்படி வேகமாக வந்து நிறுத்த வேண்டும் என்பதற்காக வந்தபோது விபத்து ஏற்பட்டது. நாங்கள் நிறுத்தி வைத்திருந்த வாகனங்கள் சாலையின் எந்த திசையில் நின்றது என்றால் சாலைக்கு தெற்கு திசையில் நின்றது, வடக்கு பகுதி காலியாக தான் இருந்தது. தெற்கு திசை என்பது அந்த சாலையின் வலது பக்கம் என்றால் மேற்கிலிருந்து வரும்போது வலது பக்கம் ஆகும்.

11. சத்தம் கேட்டு தான் நாங்கள் திரும்பி பார்த்தோம் என்றால் வண்டி வருகிறது என்று சத்தம் போடவும் நாங்கள் திரும்பினோம், அப்பொழுதுதான் விபத்து ஏற்பட்டது. வண்டி வருகிறது விலகுங்கள் என்று சத்தம் போட்டதாக நான் கூறும் விவரத்தை போலீசார் விசாரணை செய்தபோது கூறவில்லை என்றால் கூறினேன். சாட்சி அவருடைய வாக்குமூலத்தை படித்துப் பார்த்துவிட்டு அதில் மேற்படி விபரம் கூறப்படவில்லை என்று கூறுகிறார். திடீரென டமார் என்று சத்தம் கேட்டு தான் திரும்பிப் பார்த்ததாக போலீசார் விசாரணையின் போது கூறியதாக வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகையால் வழக்கு விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் நேரில் பார்த்தேன். நான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. மின் கம்பத்தை நிறுவ சூப்பர்வைசர், போர் மேன் மற்றும் லயன் இன்ஸ்பெக்டர் வரவேண்டும் என்றால் அவர்கள் வரமாட்டார்கள், ஏதாவது பிரச்சனை

என்றால் பேசி முடித்துவிட மட்டும் வருவார்கள். ஆனால், அவர்களின் பணி நிமித்தமாக அவர்கள் வரவேண்டும் என்றால் சரிதான். மின் கம்பத்தை நிறுவ ஒப்பந்தத்தை எடுத்த நபரும் மின்கம்பம் நிறுவப்படும் இடத்தில் இருக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மேற்படி நான்கு நபர்களில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் எனக்கு முன்பு சாட்சி சொன்ன நபரான லயன் இன்ஸ்பெக்டர் மட்டும் இருந்தார், வேறு யாரும் இல்லை.

13. நாங்கள் எங்களுடைய டிராக்டரை அஜாக்கிரதை மற்றும் கவன குறைவாக மின் கம்பத்துடன் சாலையை மறித்து நிறுத்தி வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் சாலையில் வாகனத்தை நிறுத்தி இருந்ததால் எதிரி அவருடைய வாகனத்தை நிறுத்துவதற்காக பிரேக் பிடித்த போது பிரேக் பிடிக்கவில்லை என்பதால் எங்கள் மீதும் டிராக்டர் மீதும் மோதி விடக்கூடாது என்பதற்காக சாலையின் இடது பக்கம் இருந்த பள்ளத்திற்குள் அவருடைய வாகனத்தை கவிழ்த்தார் என்றால் அவர் வேகமாக வந்தார், பிரேக் பிடித்தார் என்பதற்கு எவ்விதமான தடயமும் இல்லை, அவருடைய வாகனம் கண்ட்ரோல் இல்லாமல் வந்தது. எதிரி ஓட்டி வந்த வாகனம் எங்களுடைய டிராக்டர் நிறுத்தி இருந்த பகுதிக்கு 15 மீட்டருக்கு தள்ளியே கவிழ்ந்து விட்டது என்றால் சரியல்ல.

14. எத்தனை நபர்கள் மின்கம்பத்தை இறக்கி கொண்டிருந்தார்கள் என்றால் டிராக்டரில் நான்கு நபர்களும், கீழே நான்கு நபர்களும் இருந்து மின்கம்பத்தை இறக்கி கொண்டிருந்தார்கள். கீழே நின்று மின்கம்பத்தை இறக்கி கொண்டிருந்த நபர்கள் யாரெல்லாம் என்றால் கீழே மின்கம்பத்திற்கு ஒரு பகுதியில் சந்துரு மற்றும் லயன் இன்ஸ்பெக்டர், மற்றொரு பகுதியில் ராமச்சந்திரன் மற்றும் மற்றொரு நபர், அவருடைய பெயர் தெரியவில்லை, ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள். டிராக்டருக்கு மேலே மணி, கண்ணபிரான், பாலமுருகன் மற்றும் ஜோதி ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள். மேன் கம்பத்தை இறக்கும் போது தான் வாகனம் வந்து மோதியதா? என்றால் இறக்குவதற்காக தயாராகிக் கொண்டிருந்தபோது மோதி விட்டது.

15. நாங்கள் மின் கம்பத்தை இறக்கி கொண்டிருந்தபோது வாகனம் கவிழ்ந்த சத்தம் கேட்டு திரும்பி பார்த்தபோது கவனக்குறைவாக மின் கம்பத்தை விட்டதில் தான் அது சந்துருவின் தலையில் பட்டுவிட்டது என்றால் நாங்கள் மின்கம்பத்தை இறக்கவே இல்லை. எதிரி எந்த வாகன விபத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரி கவனமாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் அவர் அதிவேகமாக, கவனம் இல்லாமல் தான் வந்தார். எதிரி அதி வேகமாக வரவில்லை என்றால் சரியல்ல. அந்த பகுதியில் மற்ற வண்டிகள் எல்லாம் நிறுத்தி வைத்திருக்கும் போது அவர் மட்டும் வாகனத்தை நிறுத்தாமல் அதிவேகமாக வந்தார். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் அவர் அதிவேகமாக வந்ததால்தான் வழக்கு விபத்து ஏற்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sep 29, 2025 6:50 PM

Judicial Magistrate 2, Sattur.